# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 183/2022**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 27.07.2023**

| | |
|---|---|
| **Name : கோவிந்தராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 3, 4 present. ) (Accused 1, 2, 5 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தெத்திகிரிபட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். நான் கடந்த 2022-ம் வருடத்தில் தொப்பையாறு பொது பணித்துறையில் மதகு அடைக்கும் வேலை செய்யும் வேலைக்கு கூலி அடிப்டையில் சென்றேன். 14.02.2022-ம் தேதி மாலை 5 மணிக்கு நான் மதகு அடைத்துக்கொண்டு அடைத்து கொண்டு வரும்போது, திப்பிரத்தாம்பட்டியில் உள்ள நடராஜ் என்பவர் காட்டின் அருகில் மதகு அடைக்கும்போது, நடராஜ் மற்றும் மகேஷ்வரி, கௌசல்யா, பிரபு, ராஜேஸ் ஆகியோர் வந்து மதகு அடைக்ககூடாது என்று சொல்லி பிரச்சனை செய்தார்கள்.

2) எதிரிகளில் நடராஜ் மற்றும் கௌசல்யா இருவரும் என்னை தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். எதிரிகள் உன்னை என்ன செய்கிறேன் பார் நான் யார் என்று தெரியுமா என்று சொல்லி நடராஜ் என்பவர் மண் வெட்டியால் என்னை இடது பக்க இடுப்பில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு நடராஜன் என்பவர் இடது பக்க காதில் அடித்தார். இதனால் காது கேட்கும் திறன் இழந்துவிட்டது.

3) எதிரிகளில் பிரபு, ராஜேஷ், மகேஷ்வரி, வெங்கடேஷ், ஆகியோர்கள் என்னை கையால் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். இதனால் எனக்கு முகம் மற்றும்

காதில் ரத்தம் வந்தது. பிறகு இந்த இடத்தை விட்டு பேகவிடமாட்டேன் என்று மிரட்டினார்கள்.

4) என்னுடன் டெக்னீசியன் நேதாஜி மற்றும் உதவியாளர் குமார் என்பவர்களுக்கு கீழே நான் வேலை செய்து வந்தேன். பிறகு காயம்பட்ட என்னை நேதாஜி மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு வந்து 15 நாள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார்வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும்.

5) ஆஜரில் கௌசல்யா, மற்றும் மகேஷ்வரி உள்ளனர். மற்றவர்கள் பிரபு, நடராஜ், ராஜேஷ் ஆகியோர் ஆஜரில் இல்லை. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

6). சம்பவத்திற்கு முன்பாக 20 நாட்களுக்கு வேலைக்க சேர்ந்தேன். வாய்கால் நீளம் 15 கீமி என்றால் 20 கீ.மி ஆகும். நான் ஏற்கனவே மதகு அடைக்கும் வேலைக்கு சென்றுள்ளேனா என்றால் போன வருடம் சென்றுள்ளேன். வாய்காலின் கடை மடை பகுதி மல்லிகுந்தம் என்றால் சரிதான். நடராஜ் பூமிக்கும் கடைமடை பகுதிக்கும் முக்கால் கீமி இருக்கும் என்றால் 1 கீமி இருக்கும்.

7). நான் சொன்ன தேதிக்கு முன்பாக வாய்கால் திறந்துவிட்டார்கள் என்றால் ஒரு மாதம் முன்பாக திறந்து விட்டார்கள். தேதி நினைவில்லை. வாயக்காலில் ஒரு மாத்ம தண்ணீர் சென்று கொண்டு தான் இருந்ததது என்றால் சரிதான்.வாய்கால் திறந்துவிடபடும் தண்ணீர் கடைசி வரை அதாவது 24 கீமி செல்லவில்லை என்றால் சரிதான். எவ்வளவு அளவு தண்ணீர்

திறந்துவிடபட்டது என்றால் எனக்கு தெரியாது. பாசனத்திற்காக திறந்துவிடபடும். 90 நாட்கள் திறந்துவிட்டார்கள். ஏப்ரல் மாதம் வரை தண்ணீர் செல்லும் என்றால் சரிதான். நடராஜ் காட்டுக்கு அருகில் மதகு அடைப்பது இரும்பு வடிவில் இல்லை என்றால் சரிதான்.

8). வாயக்கால் எந்த திசையில் செல்கிறது என்றால் கிழக்கு முதல் மேற்கு வரை செல்லும். கிழக்கு திசையில் இருந்து மேற்கு திசை நோக்கி செல்லும் போது இறக்கமாக செல்லும் என்றால் மட்டமாக தான் செல்லும். ஒரே மட்டமாக தான் வாயக்கால் செல்கிறது. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து செல்லும் போது வாய்கால் பகுதி சரிவாக செல்லும் என்றால் அவ்வாறு இல்லை. நடராஜ் காட்டு அருகில் அவ்வாறு சரிவு உள்ளது என்றால் இல்லை. வாய்கால் கோப்பு வகையில் உள்ளது என்றால் சரிதான்.

9). மெயின் வாயக்காலில் இருந்து கோப்பு வாய்கால் வழியாக பாசனத்திற்காக செல்லும் என்றால் சரிதான். ஆனால் கோப்பு வாயக்காலின் நீளம் எனக்கு தெரியாது. நடராஜ் காட்டுக்கு அடுத்தது கடைமடை என்றால் இல்லை. நடராஜ் காட்டுக்கு தாண்டி எவ்வளவு மதகு உள்ளது என்றால் ஒரு கிமீ செல்கிறது. நானும் அசா2,3, தினக்கூலி என்றால் அசா2,3, தினக்கூலி கிடையாது. எந்த பாசனத்திற்காக திறந்து விடபட்டது என்றால் மானாவாரி பயிர்களுக்கு திறந்து விடபட்டது. பாசனத்திற்காக எவ்வளவு முறை திறந்து விடபட்டது என்றால் நான் சின்ன பையனாக உள்ளபோதிலிருந்து திறந்து விடபடும். 35 வருடம் முன்பு வாய்காகல் அமைக்கபட்டது. வாயக்கால் ஒட்டியுள்ள பூமி மானாவாரி பூமி என்றால் சரிதான்.

10). ஒவ்வொரு மடையாக அடைப்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் எண்ண முடியாது. ஒரு மாதமாக கடைமடை தண்ணீர் செல்லவில்லை என்பது எனக்கு புகார் வரவில்லை. மேல் அதிகாரிக்கு புகார் வந்ததா என்றால் எனக்கு தெரியாது. ஒரு இடத்தில் தண்ணீர் நிறுத்திவிட்டால் கடைமடை சென்று விடும் என்றால் சரிதான். தொப்புரில் தண்ணீர் திறந்து விட்டால் கடைமடைக்கு தண்ணீர் வரும் என்றால் ஒரு மாதம் ஆகும். வாய்கால் துர்வாரபடாத வாய்கால்

என்றால் சரிதான்.

11). நான் எதை வைத்து அடைத்தேன் என்றால் சாக்குபையில் மணல் கொட்டி அடைத்தேன். எல்லா மதகுகளையும் இதேபோல் அடைத்தேன் என்றால் மற்றவை இரும்பு சட்டறை கொண்டு அடைத்தேன். ஊர் பொதுமக்கள் கும்பாபிஜகத்தில் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடன் மற்ற முன்றாம் நபர்கள் யாரவது வந்தார்களா என்றால் முன்று பேர் மட்டுமே சென்றோம். சம்பவம் அரை மணி நேரம் நடந்திருக்கும். முன்று பேரிடம் செல்போன் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் யாரவது சம்பவம் நடைபெறுகிறது குறித்து காவல் நிலையத்திற்கு போன் முலமாக தகவல் கொடுத்தமோ என்றால் இல்லை.

12). மேச்சேரி அரசு மருத்துவமனைக்கு மாலை 6 மணிக்கு சென்றோம். அரசு மருத்துவமனையில் இருந்து மேச்சேரி காவல் நிலையம் 100 அடி இருக்கும் என்றால் சரிதான். அரசு மருத்துவமனைக்கு சென்ற பிறகு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கபட்டதா என்றால் சொல்லவில்லை. வரும் வழியில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. மற்றவர்களும் புகார் கொடுக்கவில்லை.

13). நாங்கள் முன்று பேரும் சேர்ந்து எதிரிகளை அடித்ததாக சொல்லி குற்ற எண் 79-22 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அது பொய் வழக்கு. ஒரே காம்பவுண்டுக்குள் அரசு மருத்துவமனை மற்றும் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். என்னை அரசு மருத்துவர் விசாரிக்கும் போது அடையாளம் தெரியாத 5 பெண்கள் 5 ஆண்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை.

14). மேட்டுர் மருத்துவமனையில் இருந் வேறு மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் சென்றோம். பாசனத்திற்காக செல்லும் தண்ணீர் கடைமடைக்கு தான் செல்ல வேண்டும் என்பதில்லை மற்ற காட்டுக்கும் செல்லும் என்றால் சரிதான். நான் மற்றும் அசா2,3 முன்று பேரும் மற்ற எங்களுக்கு வேண்டப்பட்ட நபர்களுக்கு மட்டும் தண்ணீர் திறந்துவிடுவது வாடிக்கை என்றால் சரியல்ல.

பாசனத்திற்காக திறந்துவிடபட்ட தண்ணீரை நாங்கள் வேண்டுமென்றே அடைத்து விட்டோம் என்றால் சரியல்ல. நியாயம் கேட்ட எதிரிகளை நாங்கள் தான் அடித்து விட்டோம் என்றால் சரியல்ல. மற்றவர்கள் வருவரை உணர்நத் நாங்கள் ஓடி சென்று பொய் புகார் கொடுர்தோம் என்றால் சரியல்ல.

15). சம்பவசமயத்தில் எங்களை வேறு யாரவது காப்பாற்றினார்களா என்றால் அசா2,3 மட்டுமே காப்பாற்றினார்கள். தடுக்க முயற்சி செய்தார்களா என்றால் அரை மணி முயற்சி செய்தார்கள். சம்பவசமயத்தில் மது அருந்தி வந்தோம் என்றால் சரியல்ல. சம்பவஇடத்தை நாங்கள் மது அருந்த பயன்படுத்தி வந்தோம் என்றால் சரியல்ல.

16). மண்வெட்டி சம்பவ யிடத்தில் போடபட்டதா என்றால் எனக்கு தெரியாது. என்னை அடித்து காயபடுத்தியதாக பொது பணி்துறைக்கு தகவல் கொடுக்கபட்டதா என்றால் அசா2 கொடுத்தார். எங்களை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு பார்ப்பதற்காக வந்தார்களா என்றால் ஆமாம். பொதுபணி துறையினர் தனியாக புகார் கொடுத்தார்களா என்றால் ஆமாம். அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் தான் இந்த வழக்கு பதியபட்டது என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை அடித்தாக சொல்வது அனைத்து என் மீது கொடுக்கபட்ட புகா்ரில் இருந்த தப்பிப்பதற்காக கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பாசனத்திற்காக செல்லும் தண்ணீரை அடைக்காமல் இருந்திருந்ததால் பிரச்சனை வந்திருக்கும் என்றால் நான் மதகு அடைக்கு வேலை தான் செய்தேன். நியாயமாக தான் செயல்பட்டேன். எனக்கு எழுத்துபூர்வமாக உத்திரவு ஏதுவும் இல்லை. பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடபட்டு பிறகு யாரும் அடைக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. முறைவைத்து மதகு திறந்துவிடபட்டது என்றால் அவ்வாறு இல்லை.

17). நான் சொல்வது போல் முறைபோடுவார்கள் என்றால் இல்லை. நான் வழக்கிற்காக வேண்டி முறை இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் இரண்டு நாட்கள் தண்ணீர் பாய்ந்து விட்டது என்றும்,

அதனால் தான் அடைத்தோம் என்று சொல்லியிருப்போம் என்றாலும், அதனால் தான் சொல்வில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் வாக்குமுலம் பெறும் போது மருத்துவமனையில் சம்பவம் நடந்த மறுநாள் விசாரித்தார்கள். அதன் பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை யார் விசாரித்தார்கள் என்றால் பெயர் தெரியாது. 15 நாட்கள் சிகிச்சையில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

18). நடராஜ் தோட்டதிற்கு இடையில் எத்தனை கோப்பு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் அனைவரும் கெட்டவார்தையால் பேசியது மற்றும் அடித்ததாக சொல்வது அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 183/2022**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 27.07.2023**

| | |
|---|---|
| **Name : நேதாஜி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 3, 4 present. ) (Accused 1, 2, 5 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சிவாடியில் குடியிருந்து PWD துறையில்ஒப்பந்த அடிப்படையில் டெக்னீசியன் ஆக வேலை செய்கிறேன். அ.சா.1 கோவிந்தராஜ் எனக்கு தெரியும். அவர் வாய்க்காலில் மதகு அடைக்கும் வேலை எனக்கு கீழ் செய்து வந்தார். அ.சா.1 ஐ கடந்த 2022-ம் வருடத்தில் தொப்பூர் – மல்லிகுந்தம் வரையில் உள்ள வாய்காலில் பொது பணித்துறையில் மதகு அடைக்கும் வேலை செய்யும் வேலைக்கு தினக்கூலி அடிப்டையில் பணியில் அமர்த்தினோம். கடந்த 14.02.2022-ம் தேதி மாலை 5 மணிக்கு அ.சா.1 மதகு அடைத்துக்கொண்டு அடைத்து கொண்டு வரும்போது, திப்பிரத்தாம்பட்டியில் உள்ள நடராஜ் என்பவர் காட்டின் அருகில் மதகினை நான் மற்றும் அ.சா.1, குமார் ஆகியோர் அடைத்துவிட்டு சென்றோம். பிறகு வந்து பார்த்தபோது, மதகு திறந்திருந்தது.

2) மறுபடியும் நாங்கள் மூன்றுபேரும் மதகினை அடைத்துவிட்டு அங்கேயே உட்கார்ந்திருந்தபோது, பிரவு என்பவர் வந்த ஏன் மதகு அடைக்கிறீர்கள் என்று கேட்டார், எனக்கு தண்ணீர் தேவையாக உள்ளது என்று சொன்னார். தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால் நாங்கள் மதகினை அடைத்ததாக சொன்னோம். அ.சா.1 ம் என்னைபோலவே மதகினை அடைத்தால் தான் கடைசி வரை

தண்ணீர் கொண்டுசெல்ல முடியும் என்று சொன்னபோது, பிரபு , நடராஜ் எங்களிடம் கேட்டார்கள். பிறகு மகேஷ்வரி, கௌசல்யா, ராஜேஸ் ஆகியோர் வந்து மதகு அடைக்ககூடாது என்று சொல்லி பிரச்சனை செய்தார்கள்.

3) எதிரிகள் அ.சா.1 ஐ தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். பிரபு மற்றும் நடராஜ் என்பவர் அ.சா.1 ஐ மண் வெட்டியால் அ.சா.1 ன் முதுகு மற்றும் இடது பக்க இடுப்பில் அடித்து காயம் ஏற்படுத்தினார். எதிரிகளில் பிரபு, ராஜேஷ், மகேஷ்வரி, வெங்கடேஷ், ஆகியோர்கள் அ.,சா.1 ஐ கையால் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். பிறகு காயம்பட்ட அ.சா.1 ஐ நான் மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்து 15 நாள் உள்நோயாளியாக இருந்தார்.

4) ஆஜரில் கௌசல்யா, மற்றும் மகேஷ்வரி உள்ளனர். மற்றவர்கள் பிரபு, நடராஜ், ராஜேஷ் ஆகியோர் ஆஜரில் இல்லை. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

5). சம்பவத்திற்கு முன்பாக 2018ம் ஆண்டு முதல் வேலை செய்கிறேன். தினகூலி என்றால் சரிதான். 19.01.2021ம் தேதி வாய்கால் தண்ணீர் திறந்து விடப்பட்டது என்றால் சரிதான். 55 நாட்கள் திறந்து விடபட்டது என்றால் சரிதான். இரண்டு நாட்களில் தண்ணீர் மல்லிகுந்தம் வந்து சேரும் என்றால் 12 நாட்கள் ஆகும். வாய்கால் நீளம் 24 கீ.மி 200 மீட்டர் ஆகும். நடராஜ் பூமிக்கும் கடைமடை பகுதியாகும் என்றால் சரிதான். கடைமடை எவ்வளவு கிமீ இருக்கும் என்றால் 1200 மி இருக்கும். கடைமடைக்கு முன்னாடி உள்ள நடராஜ் காடும் கடைமடை பகுதி என்றால் சரிதான்.

6). 24 கி.மீ வாய்காலில் எத்தனை கொப்பு வாய்கால் உள்ளது என்றால் 46 உள்ளது. நடராஜ் காட்டிற்கு பக்கத்தில் உள்ள கொப்பு வாய்காலில் எவ்வளவு பூமி பாசன வாய்கால் உள்ளது என்றால் தெரியாது. தொப்பையாறு – மல்லிகுந்தம் வாய்கால் உள்ள பகுதியில் எத்தனை ஏக்கர் பாசனம் வரும் என்றால் 3280 ஆகும். நடராஜ் பூமிக்கும் அடுத்து எவ்வளவு பூமி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நடராஜ் நிலத்தில் அடைத்த பகுதியில் இரும்பு சட்டர் இல்லை என்றால் சரிதான். இதுபோல் எத்தனை இடத்தில் உள்ளது என்றால் 4 இடங்களில் உள்ளது.

7) இதனை பராமரிக்கவேண்டிய பொறுப்பு பொதுப்பணித்துறையை சார்ந்தது என்றால் சரிதான். வாய்காலில் சட்டர் வைப்பதற்கு காரணம் அனைத்து பகுதிகளிலும் தண்ணீர் சரியாக போகவேண்டும் என்பதற்காகத்தான் என்றால் சரிதான். 2022 ல் தான் தண்ணீர் வந்தது என்றால் சரிதான். வாய்காலில் இதுவரை பாசனத்திற்காக 5 –6 முறை தான் தண்ணீர் வந்தது என்றால் 2 முறை வந்தது.

8) என்னுடைய அதிகாரிகள் எங்கெல்லாம் சட்டர் இல்லையோ அங்கெல்லாம் சட்டர் வைக்க நடவடிக்கை எடுக்கவில்லையா என்றால் தற்போது போட்டார்கள். சம்பவசமயத்தில் போடவில்லை. நான் சொல்வது போல் கடைமடைக்கு தண்ணீர் போகவில்லை என்றும், அதனால் மதகுகளை அடைத்தோம் என்பது குறித்து சீராக பராமரிக்கப்பட்டால் தண்ணீர் கடைமடைக்கு செல்லும் என்றால் சரிதான். சீராக பராமரிக்கப்பட்டால் கடைமடைக்கு தண்ணீர் செல்லும் என்பதால் மதகுகளை அடைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

9) சம்பவசமயத்தில் முறைபோட்டு தண்ணீர் திறக்கவில்லை என்றால் சரிதான். வாய்காலை பராமரிக்காமல் விவசாயியின் விவசாயத்தை பாதிக்கும் வகையில் மதகுகளை அடைத்தது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் அடைத்த பகுதியில் பாசனத்திற்கு தண்ணீர் சென்றதாக தெரிந்துகொண்டோமா என்றால் அனைவருக்கும் தண்ணீர் சென்றது. ஆனால் எவ்வளவு பூமி பாசனம் பெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

10) முழுபூமியும் பாசனம் பெறாமல் அடைப்பது தவறு என்றால் தண்ணீர் விடவேண்டி மிரட்டினார்கள். என்னை வாய்கால் சம்மந்தப்பட்ட பணி நடக்கும் போது இடையூறுசெய்தால் போலிசுக்கு மற்றும் மேல்அதிகாரிக்கு தகவல் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். ஏற்கனவே தண்ணீர் அடைக்கப்பட்ட பகுதியில் திரும்ப திறந்திருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவசமயத்தில் எவ்வளவு பாசனபூமி பாசனமானது என்று தெரியாமல் முதல் முறை அடைத்து விட்டோம் என்று சொன்னால் சரிதான். ஆனால் கடைமடைக்கு கொண்டு செல்லவேண்டி அடைத்தோம்.

11) வாய்கால் கடைமடையில் இருக்கும் பூமிகளுக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்றால் சரிதான். அனைவருக்கும் பொதுவானது. வாய்காலில் எவ்வளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டது என்றால் 46 கனஅடி ஆகும். திறந்துவிடும் தண்ணீர் அளவு பாசனபூமியின் அளவுகளை பொறுத்து திறந்துவிடப்படும் என்றால் சரிதான். நடராஜன் பூமியிலிருந்து செல்லும் வாய்கால் கிழக்கு – மேற்கு நோக்கி இறக்கமாக செல்கிறது என்றால் இல்லை. மட்டமாக செல்கிறது.

12) நடராஜன் பூமிக்கும், அதன் கீழ் செல்லும் வாய்கால் பூமிகளும் இறக்கமாக உள்ளது என்றால் ஆரம்பத்திலிருந்து 1 செமீ அளவில் இறக்கமாக செல்லும். எப்போது வாய்கால் தூர்வாரப்பட்டது என்றால் 2021 –ம் ஆண்டு கடைசியாக தூர்வாரப்பட்டது. வாய்காலில் உள்ள தண்ணீர் தடுப்பு இல்லாமல் சீராக செல்கிறது என்றால் சரிதான்.

13) சீராக செல்லும் போது, கடைமடைக்கும் சீராக செல்லும் என்றால் இல்லை. தொப்பையாறு அணையில் செல்லும் தண்ணீர் செல்லும் வேகமும், அகலமும் இருப்பது போல் கடைமடையில் இருக்காது என்றால் சரிதான். கடைமடைக்கு தண்ணீர் சென்ற பின்பு கடைசி நாள் வரை சீராக செல்லும் என்றால் சரிதான். எந்த மதகும் திறக்காமல் இருந்தால் சீராக செல்லும். எல்லா மதகும் அடைத்த பிறகு 46 கனஅடி தண்ணீரும் கடைமடை சென்றால் கடைமடை வாய்கால் தாங்குமா என்றால் 5 கிளைகள் உள்ளது.

14) மற்ற மதகுகள் போக மீதமுள்ள தண்ணீர் தான் கடைமடை வரும் என்றால் சரிதான். நடராஜின் நிலத்தின் அருகில் உள்ள வாய்கால் அவர் பராமரிப்பில் இல்லை என்றால் சரிதான். எல்லா மதகையும் பார்த்து விட்டு அடைக்கவேண்டும் என்று எழுத்துபூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சம்பவதினத்தன்று எனது மேலதிகாரிக்கு தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் தனிப்பட்ட முறையில் போலிசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேச்சேரி மருத்துவமனை காவல் நிலைய காம்பவுண்டுக்கு ஒட்டி உள்ளது என்றால் சரிதான். அப்போது, மேச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.

15) மேச்சேரி அரசு மருத்துவமனைக்கு எனது மேலதிகாரி வந்தார்களா என்றால் இல்லை. எப்போது மேலதிகாரி வந்தார்கள் என்றால் மறுநாள் வந்தார்கள். மேச்சேரி காவல் நிலையத்தில் எனது மேலதிகாரி தனியாக புகார்கொடுத்தார்களா என்றால் சாட்சி முதலில் கொடுத்தார்கள் என்று சொல்லிவிட்டு பிறகு இல்லை என்று பதிலளித்தார். சாட்சி தற்போது நாங்கள் வேலையில் இருந்தோமா என்று சான்றிதழ் கொடுத்தார். நான் சான்றிதழ் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன்.

16) அந்த சான்றிதழில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. வேறு ஏதாவது சான்றிதழில் நான் பணியில் இருந்தேன் என்று சொல்லியுள்ளர்களா என்றால் இல்லை. பாசனத்திற்காக திறந்துவிடபட்ட தண்ணீரை மற்ற விவசாயிகளுடன் சேர்ந்து கொண்டு நாங்கள் வேண்டுமென்றே அடைத்து விட்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் பணியில் இருந்தேன் என்று சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பணியில் இருந்தேன். நான் அதிகாரிகளுக்கு தெரிந்து மதகுகளை அடைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த பணியில் அதிகாரிகள் ஈடுபடுத்தவேயில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் மறுநாள் தான் வந்தார்கள். யார் யார் இருந்தோம் நானும் அசா1 மட்டுமே இருந்தோம்.

17). என் மீதும் அசா1,3 முவரும் மீது குற்ற எண். 79-2022 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யபட்டது என்றால் இல்லை. நான் அந்த வழக்கில் இருந்து

தப்பிப்பதற்காக வேண்டி நாங்கள் முவரும் சேர்ந்து பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களிடம் போன் இருந்தது என்றால் சரிதான். நாங்கள் முவரில் யாரும் போன் முலமாக தகவல் கொடுக்கவில்லை என்றால் இல்லை. சம்பவம் அரை மணி நேரத்திற்கு மேல் நடந்தது குறித்து நாங்கள் தடுக்கவில்லை என்றால் தடுத்தோம். எங்களுக்கு காயம் ஏற்பட்வில்லை என்றால் சரிதான். அசா1 க்கு சட்டையில் ரத்தம் இருந்ததா என்றால் இருந்தது. அசா1 யிடம் போலீசார் விசாரிக்கம் போது சட்டையை பெற்றார்களா என்றால் நான் வெளியில் இருந்ததால் எனக்கு தெரியாது.

18). ஆஜர் எதிரிகளை சம்பவத்திற்கு முன்பாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மீண்டும் பார்த்தேனா என்றால் மதகு பாரமரிக்கும் போது எதிரிகளை பார்த்தேன். சம்பவ சமயத்தில் அடிக்க பயன்படுத்திய மண்வெட்டி அங்கேயே கிடந்தது என்றால் ஆமாம். அதனை போலீசார் என்னிடம் காட்டி அடையாளம் கண்டார்களா என்றால் இல்லை.

19). நான் முதல் விசாரணையில் ஏற்கனவே மதகு அடைத்த பிறகு மீண்டும் யாரவது மதகு அடைத்தது நாங்கள் இருந்தோம் என்பது குறித்து அது சம்பந்தமாக போலீசார் விசாரணையில் சொன்னோ என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் என்னை விசாரித்து டைப் செய் எழுத்துபூர்வமாக விசாரித்து வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திலும் டைப் செய்து யாரிடமும் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். நான் மட்டும் தான் போலீசாருடன் சென்றேன்.

20). மேச்சேரி காவல் துறையினர் எனக்கு சாட்சியம் அளிக்க சொல்லி கொடுத்தார்களா என்றால் இல்லை. பாசனத்திற்காக திறந்து விடபட்ட தண்ணீர் மதகுகளில் அடைக்காமல் இருந்ததிருந்ததால் இந்த பிரச்சனை ஏற்பட்டிருக்காது. கொப்புக்கு பாத்தியபட்ட பூமி எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. கொப்புக்கு முறையாக பாயாமல் அடைத்தது தவறு என்றால் சரியல்ல. நான் தானாக முன்வந்து மதகுகளை அடைத்து வைத்து விட்டு என்னுடைய தவறால் பிரச்சனை நடந்தது என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் சேர்ந்து

எங்களை கெட்டவார்தையால் பேசி அசா1 யை அடித்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் மீது வழக்கு நிலுவையில் உள்ளதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி அந்த வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 183/2022**

**Prosecution witness : அ.சா.3** **Date : 27.07.2023**

| | |
|---|---|
| **Name : குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 3, 4 present. ) (Accused 1, 2, 5 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இலக்கியம்பட்டியில் குடியிருந்து PWD துறையில் அலுவலக உதவியாளராக உள்ளேன். அ.சா.1 கோவிந்தராஜ் எனக்கு தெரியும். அவர் வாய்க்காலில் மதகு அடைக்கும் வேலை எங்களுக்கு கீழ் செய்து வந்தார். அ.சா.1 கடந்த 2022-ம் வருடத்தில் தொப்பூர் - மல்லிகுந்தம் வரையில் உள்ள வாய்காலில் பொது பணித்துறையில் மதகு அடைக்கும் வேலை செய்யும் தினக்கூலி அடிப்டையில் பணியில் இருந்தார். கடந்த 14.02.2022-ம் தேதி மாலை 5 மணிக்கு அ.சா.1 மதகு அடைத்துக்கொண்டு அடைத்து கொண்டு வரும்போது, நடராஜ் என்பவர் காட்டின் அருகில் மதகினை யாரோ திறந்துவிட்டார்கள்.

2) மறுபடியும் நாங்கள் மூன்றுபேரும் மதகினை அடைத்துவிட்டு அங்கேயே உட்கார்ந்திருந்தபோது, பிரபு என்பவர் வந்த ஏன் மதகு அடைக்கிறீர்கள் என்று கேட்டார், எனக்கு தண்ணீர் தேவையாக உள்ளது என்று சொன்னார். தண்ணீர் பற்றாக்குறை உள்ளதால் நாங்கள் மதகினை அடைத்ததாக சொன்னோம். அ.சா.1 ம் என்னை போலவே மதகினை அடைத்தால் தான் கடைசி வரை தண்ணீர் கொண்டுசெல்ல முடியும் என்று சொன்னபோது, எதிரிகளில் பிரபு,

என்பவர் நீ யார் சொல்வதற்கு என்று பேசினார். பிறகு நடராஜ் என்பவர் சம்பவயிடம் வந்தார். பிறகு கௌசல்யா மற்றும் 2 நபர்கள் வந்தர்கள் வந்து மதகு அடைக்ககூடாது என்று சொல்லி பிரச்சனை செய்தார்கள்.

3) எதிரி பிரபு அ.சா.1 ஐ தேவடியா பையா என்று கெட்டவார்த்தையால் திட்டினார்கள். பிரபு மற்றும் நடராஜ் என்பவர் அ.சா.1 ஐ மண் வெட்டியால் அ.சா.1 ன் தோள்பட்டை மற்றும் இடது பக்க இடுப்பில் அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு காயம்பட்ட அ.சா.1 ஐ நான் மற்றும் அ.சா.2 மேச்சேரி அரசு மருத்துவமனை கொண்டு சென்று பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்து அ.சா.1, 15 நாள் உள்நோயாளியாக இருந்தார்.

4) ஆஜரில் கௌசல்யா, மற்றும் மகேஷ்வரி உள்ளனர். மற்றவர்கள் பிரபு, நடராஜ், ராஜேஷ் ஆகியோர் ஆஜரில் இல்லை. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

5). நான் தினக்கூலி அடிப்டைபயில் 8 ஆண்டுகாலமாக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். நான் மற்ற வாய்காலுக்கும் செல்வேன் என்றால் சரிதான். 2012ம் ஆண்டு தண்ணீர் திறந்துவிடப்பட்டது எவ்வளவு நாள் சென்றது என்றால் அப்போது நான் இல்லை. 14.02.2022ம் தேதி வாய்கால் பணியில் நான் இல்லை என்றால் சரியல்ல. நான் இருந்தேன். தண்ணீர் எவ்வளவு நாட்கள் 55 நாட்கள் திறந்தவிடபட்டது. அதில் 20 நாட்கள் மட்டுமே தண்ணீர் சென்றது.

6). திறந்துவிட்பட்ட தண்ணீர் கடைமடைக்கு சென்றது என்றால் போய் சேர்ந்ததது. பொதுப்பணித்துறையில் மதகுகள் அனைத்தும் அனைத்து பகுதிகளுக்கும் தண்ணீர் செல்லும் வகையில் அமைக்கபட்டது என்றால் சரிதான். நடராஜ் கொப்பு வாய்கால் அருகே சட்டர் இல்லை என்றால் சரிதான். 4–5 பகுதிகளுக்கு சட்டர் இல்லை என்றால் சரிதான். நடராஜ் பூமி ஒட்டி

கடைமடை உள்ளது என்றால் சரிதான். நடராஜின் பூமிகளுக்கு பாசனம் ஆகிவிட்டதா என்றால் எனக்கு தெரியாது. மற்ற பூமிகள் பற்றியும் எனக்கு தெரியாது. கொப்பு பாத்தியபட்ட பூமிகளுக்கு பாசன வசதி அடைந்த பின்னர் மதகு களை அடைக்க வேண்டுமென்றால் மதகுகளை அடைத்தால் தான் அனைவருக்கும் தண்ணீர் தேவையானது ஆகும். கொப்புக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூமிகளுக்கு பாசன வசதி பெற்றதா என்றால் இல்லை. என் முன்பாக வாக்குமுலம் டைப் செய்து பதியவில்லை என்றால் என் முன்பாக செய்யவில்லை.

7). நான் முதல் விசாரணையில் மதகுகளை அடைத்து விட்டு உட்கார்ந்து இருந்தோம் என்று போலிசாரிடம் சொன்னோ என்றால் இல்லை. என் மீதும் அசா1 அசா2 மீது குற்ற எண். 78–22 வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் அடித்தாக சொல்லி வழக்கு நிலுலையில் உள்ளதால் தான் நாங்கள் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் வழக்கு என் மீது நிலுவையில் உள்ளதை தெரிந்து கொண்டே அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்.

8). சம்பவ குறித்து நாங்கள் மேல்அதிகாரிகளுக்கு தகவல் சொன்னோம் என்றால் சம்பவ சமயத்தில் சொல்லவில்லை. பிறகு தகவல் கொடுத்தோம். சம்பவத்திற்கு பிறகு போன் முலமாக போலீசாருக்கு தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை. மேச்சேரி அரசு மருத்துவமனையில் முதலுதவி அசா1 க்கு செய்தார்களா என்றால் ஆமாம். அப்போது எங்களை அடித்த விபரத்தை சொன்னோமா என்றால் சரிதான். மருத்துவமனை காவல் நிலையம் ஒரே காம்பவுண்டுக்குள் உள்ளது என்றால் சரிதான். எனது அதிகாரிகள் வந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் என்னை மல்லிகுந்தம் வந்து விசாரித்தர்கள். நான் மல்லிகுந்தம் பகுதியில் எங்கு இருந்தோம் என்றால் மொட்டுர் பக்கத்தில் இருந்தோம்.

9). என்னிடம் எழுத்துபூர்வமாக எனது மேல் அதிகாரிகள் புகார் பெற்றார்களா என்றால் இல்லை. ஆனால் விசாரித்தர்கள். எனது மேல்அதிகாரிகள் நான்

பணியில் உள்ளதை குறித்து சான்றிதழ் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் பணியில் இல்லாத போது சம்பவம் நடந்ததால் எனது மேல்அதிகாரிகள் எனக்கு சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் நான் பணியில் இருந்தேன். எல்லா மதகுகளை அடைக்க வேண்டி உத்திரவு இல்லை என்றால் சரியல்ல.

10). நாங்கள் தானாக மதகுகளை அடைத்து விட்டோம் என்றால் சரியல்ல. மதகுகளை அடைக்க சொல்லி எழுத்துபூர்வமாக எனது அதிகாரிகள் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களது பணியே மதகு அடைப்பது தான். மதகுகளை அடைக்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. கடைமடை வரைக்கும் தண்ணீர் செல்லாமல் இருந்திருந்தால் இரும்பு சட்டர் அனைத்து மதகுகளுக்கும் அமைத்து இருப்பார்கள் என்றால் சாக்கு வைத்து அடைத்தோம். சம்பவ சமயத்தில் கடைமடை பகுதிவரை தண்ணீர் சென்றது என்றால் மதகுகளை அடைத்தால் சென்றோம்.

11). வாய்கால் இறக்கமாக உள்ளது என்றால் ஒரே சீராக உள்ளது. சீராக உள்ளது என்றால் மேடாக பகுதியில் இருந்த பள்ளமான பகுதிக்கு செல்லும் வகையில் உள்ளது என்றால் சீராக செல்லும் வகையில் உள்ளது. நடராஜ் பூமிக்கு அருகில் கொப்பு அருகில் வாய்கால் பகுதி தண்ணீர் செல்லும் வகையில் சரிவாக உள்ளதா ஒரே level உள்ளது. வாய்கால் துர்வரபட்டது என்றால் சரிதான். துர்வரப்படும் நோக்கமே தண்ணீர் தங்குதடையின்றி செல்வதற்குக்காக என்றால் சரிதான். நடராஜ் பூமிக்கு அருகில் வாய்காலில் தடையுள்ளதா என்றால் இல்லை. அதனால் தண்ணீர் தடையின்றி செல்லும் என்றால் சரிதான்.

12). மேச்சேரி காவல் நிலைத்தில் நாங்கள் புகார் கொடுக்க முயற்சி செய்தோமா என்றால் இல்லை. நான் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டுவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு என்ன நடந்தது என்பது என்க்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் கெட்டவார்தையால் பேசி அடித்தாக சொல்வது எங்களை காப்பாற்றி கொள்வதற்காக சொன்னது என்றால் இல்லை. சம்பவம் 5 நிமிடத்தில் நடந்து

முடிந்து விட்டது என்றால் சரிதான்.

13). காயம்பட்டவரை நாங்களே இருசக்கர வாகனத்தில் மேச்சேரிக்கு அழைத்து சென்றோம். மேட்டூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர் விசாரிக்கும் போது நான் அருகில் இருந்தேனா என்றால் இல்லை. அதனால் மருத்துவரிடம் என்ன சொன்னார்கள் என்பது எனக்கு தெரியாது. மண் வெட்டி சம்பவயிடத்தில் இருந்தததது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அடிதடி நடந்த இடத்தை காண்பிக்கசொன்னார்களா என்றால் கூப்பிட்டார்கள். 4 நாட்கள் கழித்து கூப்பிட்டார்கள். என்னை தவிர சம்பவ இடத்திற்கு யாரும் என்னுடன் வரவில்லை. சம்பவ இடத்தை பார்த்து போலீசார் மண்வெட்டியை எடுத்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. வேறு ஏதாவது தடயங்களை கைபற்றினார்களா என்றால் இல்லை. மண் வெ்ட்டி அடையாளம் காண்பிக்க அழைத்தார்களா என்றால் இல்லை.

14). நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அதனால் தான் மண்வெட்டி மற்றும் தடயத்தை கைபற்றவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாக வே காபாற்றி இருந்தால் எனக்கு சாதாரணமாக காயம் ஏற்பட்டு இருக்கும் என்றால் நாங்கள் தான் காப்பாற்றினோம். நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.